1975 மார்ச் 29]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, புதிய முறைகளையெல்லாம் பின்பற்றுவது நல்லதுதான், முயற்சிக்கும்.

சென்னை–சத்தியவேடு பேருந்து வழித்தடம்

*487 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) சென்னையிலிருந்து சத்தியவேடு சென்று வரும் A. T. M. பேருந்து, கன்னங்கோட்டை கிராமம் வரை சென்று திரும்ப பெர்மிட் இருந்தும் போவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அப்பேருந்து கன்னங்கோட்டை வரை சென்றுவர செய்வதற்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.
(இ) சென்னையிலிருந்து சத்தியவேடு சென்று வரும் ஏ. டி. எம். பேருந்து 5—7—1974 முதல் கன்னங்கோட்டை வரை செல்லாமல் அனுமதிச் சீட்டின் நிபந்தனைகளை மீறியதற்காக மோட்டார் வண்டிகள் சட்டம் 60-வது பிரிவின் கீழ் அனுமதிதாரர்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தப் பேருந்து உரிமை யாளர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அந்தக் கிராமத்தின் மக்களுக்கு வேண்டியபரிகாரம் கிடைக்கவில்லை. ஆகவே உடனடியாக இந்தத் தனியார் பேருந்து அந்த ஊர் வரையில் சென்றுவரவோ அப்படியில்லை யென்றால் பல்லவன் போக்குவரத்தின் மூலம் ஒரு பேருந்தை அந்த ஊர்வரையில் விடவோ உரிய நடவடிக்கையைத் துறை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நடவடிக்கை எடுத்த பிறகும் அந்த வழித்தடத்தில் தனியார் பேருந்து செல்லவில்லை யென்றால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த யோசனை பரி சீலிக்கப்படும்.

Madras—Meenambakkam bus service

488*—*Q* .Thiru N. DENNIS : Will the Hon the Minister for Transport be pleased to state :—

(a) whether there are proposals under the examination of the Govern ment to run a luxury bus service between Meenambakkam Air Port and Madras City ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) (இ) : சென்னைக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும் இடையே ஒவ்வொன்றும் 34 இருக்கைகள் கொண்ட சிர்வசதிப் பேருந்துகள் இரண்டினைப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் இயக்குகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இன்றைக்கு டாக்சி கட்டணம் உயர்ந்திருக்கிறது. இது போன்று முக்கிய இடங்களாகிய எக்மோர், சென்ட்ரல் ஸ்டேஷன்களுக்கும் லக்சுரி பஸ் சர்வீசை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு முன்வரும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நம்முடைய அரசு விட்டிருக்கும் இந்தப் பேருந்தில் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து வெளிநாட்டுப் பயணிகள் பயணம் செய்கிறார்கள். அதன்பொருட்டு அந்தப் பேருந்தில் குளுகுளு வசதி செய்யும் உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் இல்லை.

Retirement age for Gurukkals.

*489—*Q*. Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :—

(a) whether there is any proposal under the consideration of the Government to fix retirement age for Gurukkals in temples under the Hindu Religious and Charitable Endowments Department ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) கோயில்களில் பணி செய்யும் பரம்பரை அல்லாத குருக்கள் 60 வயது பூர்த்தியானவுடன் ஓய்வு பெற வேண்டும் என்ற விதி ஏற்கனவே அமுலிலுள்ளது.

(இ) இந்த வினா எழ இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தக் கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு, சின்ன கோயில்களில் குறைவாகவும், பெரிய கோயில்களில் அதிகமாகவும் வருமானம் வரக்கூடிய முறையிருக்கிறது. இதை மாற்றியமைத்து சர்க்கார் ஒரே சீராக அர்ச்சகர்களுக்குக் கிடைக்கும் முறையிலேயும், பின்னால் அவர்கள் வயதானதற்குப் பிறகு அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் முறையிலேயும் திட்டம் ஏற்படுத்த சர்க்கார் முன் வருமா ?